## ஜனவரி மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.01.2017 ஞாயிறு | காலை 12.00 மணி | ஆண்டவனின் உடன்படிக்கை | தொ.நூல் 9:8 - 17 லூக்கா 22:14 - 23 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 08.01.2017 ஞாயிறு | காலை 8.30 மணி | இறை ஆலயமாகிய சரீரத்தை கனப்படுத்துவோம் | சபை உரை 6: 1-12 மத் 5 : 21 - 30 | திரு. பால் பன்னீர் செல்வம் |
| 15.01.2017 ஞாயிறு | காலை 8.30 மணி | ஒற்றுமைக்கான அழைப்பு | எசே 37:15 - 23 யோவான் 15:1 -12 | திரு. ஜோசப் |
| 22.01.2017 ஞாயிறு | காலை 8.30 மணி | விசுவாசம் மற்றும் செயல்பாட்டில் ஒன்றிணைதல் | யோசு 3: 9 -17 மாற்கு 1:21 - 34 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 29.01.2017 ஞாயிறு | மாலை 8.30 மணி | உண்மையான பக்தி | மீகா 6: 1-8 மத் 6: 1-8 | அருள்திரு. B.J.பிரேமையா |

# ஜனவரி மாதம் - 2017

# ஆயர்மடல்

அருமை திருச்சபை குடும்பத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம் ஆசீர்வாதமாக அமைவதற்கு இறைவன் அருள் புரிவாராக.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக.

2017 ஆம் ஆண்டு நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக மாற இறைவன் உதவிபுரிவாராக..

ஆண்டவரின் அருட்பணியில்

**Rev.Daniel Chelladurai**

# BIRTHDAYS IN THE MONTH OF JANUARY

| | | | |
|---|---|---|---|
| January 1 | Mrs.M.Janagarani | January 23 | Mr. S. John Jeyapal Raja |
| | Mr. V.Richard Moses | | Mrs. Vanitha |
| January 2 | Mr. M.Ponnappan | January 24 | Mr. P.G.Delwyn Anand |
| | Mr.S.K.Dass | January 25 | Mr. M. Vino John |
| January 4 | Ms. C.Sheron Trinita | | Mrs. S. Thava Selvi |
| January 8 | Master. Samuel Edward | January 26 | Mrs. J. Jaya Joseph |
| | Mr. Fredrick D.Vasanth | | Dr.W.Sophreniaa |
| | Mr. Selva Durail | January 27 | Mr.S. Prince |
| January 15 | G.Ligim | January 29 | Mr.A.Raj Prashanth |
| January 17 | Mr. Sam Mithroy Devaram | January 31 | Mrs. C.Jean Premila |
| January 22 | Mr. Jebaraj Dawson | | Mr. G.D. Solomon |
| | Mr. Charles Moses | | Mrs. Angel Emerson |

# WEDDING DAYS IN JANUARY

January 4 Mr. P.Percy Rajkumar & Mrs. May Pauline
January 7 Mr.Immanuel George & Mrs. Vidhya Priyadharshini
January 11 Mr. M.T. Richard Thomas & Mrs. C.R.Sweetlyn Jeba
January 12 Mr.S.Jence Raja Jeyaseelan & Mrs.T.Jeyanthi Jeyaseeli
January 14 Mr.Jebaraj Dawson & Mrs.Rajasundari
January 17 Mr.Joseph Raja & Mrs.Priyadharshini Raja
January 18 Mr.P. Thangamani & Mrs. M.Nirmala Kumari
January 19 Mr. C.Paul Ashok & Mrs. Exelda Kumari
Mr.N.Ponnaiyan & Mrs. C.R. Geetha Kumari
January 21 Mr.J.Arul Raj & Mrs. Lily
January 22 Mr.P.Dickson & Mrs. D.Leela Bai
January 24 Mr.S.David Nirmal Raj & Mrs. Anitha David
January 26 Mr. P.Jawahar & Mrs. K.Joy
Mr.M.Luxon Samuel & Mrs. Magadalene
January 27 Mr.S. Suresh Kumar & Mrs. Hanna Suresh Kumar
January 28 Mr.R.Prabhu & Mrs. R.Esther Sandhya Priya



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்
அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

கிறிஸ்டியன் பிரடரிக் ஸ்வார்ட்ஸ்



1726 - 1798

திருநெல்வேலி திருமண்டிலம். கிறிஸ்தவ ஆலயங்களே இல்லாத காலம். இருள் நிறைந்த காலம் என்று கூடக் கூறலாம். ஏனேனில் சுவிசேஷம் அங்கு அறிவிக்கப்படாதிருந்தது.

விடுவெள்ளி நட்சத்திரமாய் 1771ம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்தார் கிறிஸ்டியன் பிரடரிக் சுவார்ட்ஸ். சிறுவயதிலேயே தாயாரை இழந்திருந்தாலும் தந்தையின் வளர்ப்பு அவரை மிஷனெரியாக்கியது.

ஊழியப்பணியோடு சமுதாயப் பணியையும் செய்தார். வாங்குவதை பார்க்கிலும் கொடுப்பதையே பாக்கியமாகக் கருதி ஏழைகளின் வாழ்வை உயிரடையச் செய்தார்

கிழக்கிந்திய கம்பெனியாக்கும், ஹைதர் அலிக்கும் மைசூரில் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது அநெக மக்கள் உயிரைஇழந்தார்கள். அதிக சேதங்கள்ஏற்பட்டது. ஹைதர் அலியுடன் வீணாகப் போரிட்டு தங்களை இழந்துபோக விரும்பாத கிழக்கிந்தியா கம்பெனியார் ஹைதர் அலியுடன் உடன்படிக்கை செய்யச் சென்றார்கள் அப்போது ஹைதர் அலி சுவார்ட்ஸ் ஐயர் அவர்களை சுட்டிகாட்டி, அந்த கிறிஸ்தவரை கூப்பிடுங்கள். அவர் யாரையும் ஏமாற்றமாட்டார். அவர் சொன்னால் போதும் என்றார்.

சுவார்ட்ஸ் ஐயர் தஞ்சாவூர் அரசவையில் முதல் அமைச்சராகவும், மன்னரின் தலைமை குருவாகவும் செயல்பட்டார். தஞ்சை மன்னன் சரபோஜியை உருவாக்கியவரும் இவரே. தஞ்சாவூரில் பஞ்சம் தலைவிரித்தாடியாபோது, உணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் உண்மைப் பொறுப்பை பெற்று, எல்லா சமயத்தினருக்கும் சேவைகள் செய்தார்.

திருநெல்வேலியின் தந்தை என்றழைக்கப்படும் சுவார்ட்ஸ் ஐயர்தான் முதல் திருச்சபையை அங்கு பிரதிஷ்டை செய்து. முதல் ஞானஸ்நான ஆராதனையையும் நடத்தினார். குளோரிந்தாள், சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தம், வேதநாயகம் சாஸ்திரியார் ஆகியோரை கிறிஸ்துவுக்காக மாபெரும் பணி செய்யத் தூண்டுகோலானார்.

48 ஆண்டுகள் இந்தியாவிலேயே அரும்பணிகள் செய்த இவர். ஒருமுறை கூடத் தம் தாயகம் திரும்பவில்லை.

அன்பரே! ஆண்டவரின் அழைப்பின் நிலைத்து நிற்கிறீர்களா?

விருப்பம் இல்லாத காரியம் எதிர்ப்படும் ஒருமணிநேரம் வேதத்துடன் ஒட்டிக் கொள் .
– ஸ்வார்ட்ஸ்

தொகுப்பு
**EVA. பால் பன்னீர் செல்வம்**

# கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்கலம்

சுருட்டி     பல்லவி     ஆதிதாளம்

சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்; ஆதி
திரி யே நாதனுக்கு சுபமங்களம்.

அனுபல்லவி

பாரேறு நீதனுக்கு, பரம பொற்பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு,

**ஆசிரியர் : வேதநாயக சாஸ்திரியார்** (1774-1864)

**ஆசிரியர் குறிப்பு :** கீர்த்தனை 3 இல் காண்க

இயேசுவே திரியேக – (திருத்துவ) நாதர் என அவருக்கு மங்களம் பாடுகிறார், காலட்சேபம், வில்லுப்பாட்டு போன்ற பல நிகழ்வுகளிலும், வழிபாட்டு முடிவிலும் சில கிராம சபைகளில் ஞாயிறு வழிபாட்டு முடிவிலும் இப்பாடல் பாடப்பட்டு வருகிறது இதன் சிறப்பாகும். சத்திய, நேர்மையான, நற்போதனைகள் தந்த (நித்திய சங்கீதனுக்கு) நாம் பாடிடும் அத்தனை கீர்த்தனைகளுக்கும் உரியராகிய ஏசுவுக்கு மங்களம், (குணாளனுக்கு) கலைகள் அருளும் கடவுளுக்கு மங்களம் என்றார், வரவேணும் பரனாவியே பாடலைப்போன்றே யாப்பின் சிறப்பும் இசைக்கேற்ற தாளமும் கருத்தும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. **பெத்லகேம் குறவஞ்சி**யின் தொடக்கப் பாடல்களில் இதுவும் ஒன்று.

**மெட்டு :** இயேசு கிறிஸ்து நாதர் – 93
தேவா இரக்கமில்லையோ – 104
பாவியின்றே திரும்பாயோ – 130
வேதபுத்தகமே – 212

**பல்லவி :** **ஸ்ரீ** என்ற சொல் இறைவனுக்கும், மிகச் சிறந்த மனிதர்களுக்குமே பயன்படும். சீர் என்ற சொல்லும் அவ்வாறே இங்குப் பயன்பட்டுள்ளது (சீர்) சிறப்புடைய (ஆதி தொடக்கமுதலுள்ள மூவரில் ஒருவரான ஏசுவுக்கு மங்களம். இங்கு ஆதி என்று தாளத்திற்காக தவறாகப் பாடுவதை தவிர்க்க வேண்டும்.



**சரணம் 1 :** (ஆதிசர்வேசன்) அவரே தொடக்கமும், முதலுமானவர் (அகிலபிரகாசன்) உலகுக் கொளியானர். அன்பர் (நீதிபரன் பாலன்) நீதியின் கடவுளுக்குக் குமாரன் நித்திய (குணாளன்) நற்குண கடவுளுக்கு (ஓதும்) கேட்பவர் – ஜெபிப்பவர்க்கு (அனுகூர்க்கு) எண்ணியதைச் செய்ய உதவுபவர்.

**சரணம் 2 :** (மானர) மகிமையுள்ள (அபிமானன்) அன்புடையவருக்கு வானத்தவருக்கு, கலைகள் பலவும் (கியானன்) புகழ்மிக்க ஞானனுக்கு கற்பிப்பவருக்கு மெய்யறிவினருக்கு (கானான்நல்தேயன்) இஸ்ரவேல் நாட்டினருக்கு கன்னியின் மைந்தனுக்கு (கோனார்) இடையர். (கூறு பெத்தலேயனுக்கு) "பெத்லேகம் நாதர்" என பெத்லேகம் குறவஞ்சியின் முன்பே சாஸ்திரியார் கூறியதால் (கூறு பெத்லேகம் என்கிறார்) எனவே "குருபெத்தலேயனுக்கு" எனப் பாடுவது சரியன்று.

**சரணம் 3 :** (பத்து லட்சணத்தனுக்கு) பத்து குணமுடையவர், என்றென்றும் உள்ளவருக்கு (சத்திய விஸ்தாரன்) சத்தியத்தை விளக்கிக் கூறியவருக்கு (சருவாதிகாரன்) எல்லா அதிகாரமுடையவனுக்கு பக்தருக்கு உதவி செய்பவருக்க, தேவமைந்தனுக்கு மங்களம் என்கிறார்.

**குறிப்பு :** எதுகைத் தொடையும் இயைபுத் தொடையும் பாடல் முழுவதும் ஒலி ஒன்றிய சொற்களால் அமைந்துள்ளது.

ஆதாரம்:
**CLS PUBLICATION**

**- Nishada's**

## முருங்கை கீரை

- இதில் உள்ள அமினோ ஆசிட் தாய்ப்பால் சுரப்பதை அதிகரிக்கும்
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
- உடல் சுறுசுறுப்படையும்
- இரும்பு சத்து உள்ளது.

# வேத வினா - விடை போட்டி

## ஜனவரி மாத கேள்விகள்

**( வசன ஆதாரம் தரவும் )**

**I பொருத்துக:**

| | | |
|---|---|---|
| I. | சேஸ்பாத் – சார் | a. திராட்ச ரசம் |
| ii. | ஊசி | b. வானங்கள் |
| iii. | யசினியா | c. கானானை வேவுபார்க்க |
| iv. | முகம் | d. சூகாள் |
| v. | ஏபேர் | e. நிறம் |
| vi. | அம்மியேல் | f. திராட்சைகுலை |
| vii. | யோசுலா | g. விசாரிப்புகாரன் |
| viii. | எஸ்கோல் | h. யூதாவின் அதிபதி |
| ix. | விரல்கள் | i. பெத்ஷிமேஸ் |
| x. | சொடுசா | j. ஊழியக்காரன் |

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 22-1-2017**

ஆசிரியரின் முடிவே இறுதியானது

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**

எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

திருச்சபை மக்கள் அனைவருக்கும்
குடியரசு தின நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்கிறோம்



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. யெகோவா ஷாலோம் – நியா 6:24
2. ஆலோசனைக் காரன் – லூக்கா 23: 50
3. தாவீது ராஜா – 2 சாமுவேல் 19: 32 – 36
4. விடுதலை – நீயா 2: 16
5. சவுலின் குமாரன் – 1 சாமுவேல் 31: 2
6. நம்பிக்கை – எரோமியா 48:13
7. பொக்கிஷதாரி – ஏசாயா 22:15
8. இரட்சிப்பு – மத் 1: 21
9. இராஜாவின் பிரதானி – எஸ்தர் 2: 21
10. தகப்பன் – எசேக்கிஸ் 4: 9

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. லீலா டிக்சன்
3. திருமதி. ஜுபிலி தர்மராஜ்
4. திருமதி. கீதா ஹென்றி
5. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சார்ட்
7. திருமதி. மெரில் ஜஸ்டின்

## படித்ததில் பிடித்தது

**மகிழ்ச்சியான வாழ்விற்கு 10 யோசனைகள்**

சாந்தமாக பேசுங்கள்
சுவையாக சாப்பிடுங்கள்
போதுமான நேரம் உறங்குங்கள்
பொறுமையான பணி செய்யுங்கள்
உண்மையாக இருங்கள்
எதார்த்தத்தை புரிந்து கொள்ளுங்கள்
சரியாக திட்டமிடுங்கள்
நேர்மையாக சாம்பாதியுங்கள்
தொடர்ந்து சேமியுங்கள்
நாகரீமாக நடந்துக் கொள்ளுங்கள்
எதிர்பார்ப்பின்றி அன்பு செலுத்துங்கள்

**A.Joseph**

# தேவ நோக்கம் நிறைவேறட்டும்

இதோ அவர் அளிக்கும் பலன் அவரோடே கூட வருகிறது... ஏசாயா 40: 10

ஏசாயா: 40: 1-11 மத்தேயு 6: 25 - 34

இந்த ஆண்டில் தேவன் என் வாழ்க்கையில் என்ன செய்யப் போகிறார் என்ற கேள்வியோடு நாம் காணப்படலாம். இந்த கேள்வியின் பின் தொடர்தலாக தேவன் எனக்கு என்ன வாக்குறுதியை இந்த ஆண்டிற்காக தரப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு ஏற்படலாம். ஆனால் தேவன் நம்முடைய வாழ்க்கையில் என்னச் செய்யப் போகின்றார் என்ற கேள்வியை விட, எந்த விதமாக நாம் செயல்பட்டால் தேவன் நம்முடைய நல்ல வாஞ்சைகள் நிறைவேறத்தக்கதாக செயல்பட இயலும் என்பதே முக்கியமானது.

நாம் எவ்விதமான ஒரு செயல்பாட்டிற்கென்று நம்மை அர்ப்பணிக்கின்றோமோ அதனுடைய தன்மையின் அடிப்படையிலேயே தேவனுடையச் செயல்களும் இருக்கும். ஆண்டின் துவக்கத்திலே ஆண்டவர் ஒரு ஆசீர்வாத வாக்குறுதி தருகின்றார் என்ற தேவ சத்தியம் சாராத ஒரு நம்பிக்கையை சார்ந்து செயல்படுவது அல்ல. இந்த ஆண்டில் நாம் வாழப்போகின்ற ஒரு வாழ்க்கை முறையைக் குறித்த தெளிவான தரிசனத்தோடு முன்னோக்கிச் செல்வதே அவசியம்.

இந்த ஆண்டில் தேவ நோக்கம் நிறைவேறத்தக்கதான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். இந்த ஆண்டு எந்த ஒரு சூழ்நிலையிலும் தேவ ஐக்கியம் சார்ந்து வாழ்வதில் உறுதியாயிருக்க வேண்டும். இந்த ஆண்டு தேவன் விதித்த உயர் வழிகளில் நடந்து காட்ட வேண்டும். இவ்விதமான உயர்ந்த ஆவிக்குரிய இலக்குகளை எட்டுகின்ற நோக்குடன் வாழ்வதைக் குறித்து நாம் கரிசனை கொண்டால் தேவன் நம்முடைய வாழ்க்கையில் தம்முடைய கரிசனையை வெளிப்படுத்தாமலிருக்கமாட்டார்.

தேவ நோக்கம் நிறைவேறுதல் என்றால் என்ன? தேவன் நம்மை தம்முடைய பிள்ளைகளாக தெரிந்து கொண்டார். தேவனுடைய தெய்வீக அழகினை சுபாவ நிலைகளிலும், செயல் நிலைகளிலும் எல்லா அணுகுமுறைகளிலும் பிரதிபலித்து வாழ்வதே பிள்ளைகள் மேல் தேவன் வைத்த நோக்கம் ஆகும். தேவ ஐக்கியத்தில் வாழ்தல் என்றால் என்ன? வெறும் பக்தி வாழ்க்கையில் திருப்பி அடையாமல் தேவ உறவோடும் தேவ பிரசன்னத்தோடும் வாழ்வதை முதன்மைப்படுத்தி அதற்கேற்றபடி செயல்படுதலே தேவ ஐக்கியத்தில் வாழ்தல் ஆகும். பலவிதமான வழிகள் நமக்கு முன்பாக இருந்தாலும் தேவ வழி எது என அறிந்து அந்த வழி எவ்வளவு இடுக்கமானதாகயிருந்தாலும் அதில் நடக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இந்த மூன்று விஷயங்களை முக்கியமாக எண்ணி செயல்படுகிற மனிதனின் வாழ்க்கை தேவனுடைய ஆசிர்வாத செயல்பாடுகளற்ற வாழ்க்கையாக இருக்கவே இருக்காது. எத்தனை விரச்சனைகள் நம்மை அழுத்தினாலும் இந்த மூன்று விஷயங்களைக் குறித்து நமக்குள் ஆவிக்குரிய அழுத்தம் ஏற்பட்டால் இந்த ஆண்டில் தேவனுடைய பலத்த கரத்தின் செயல்களை நிச்சயம் காண்போம்.

**- திருமதி உஷா ஜோசப்**



# கிறிஸ்மஸ் வெகுமதி அளிக்கும் விழா

**சோரஞ்சேரி, அணைக்கட்டுச்சேரி - பட்டாபிராம் குரு சேகரம்**

நமது “CSI - இயேசுவில் புதுவாழ்வு” ஆலயத்தில் பெறப்பட்ட புத்தாடைகளை சேகரித்து கொண்டு சோரஞ்சேரி கிராமத்திற்கு Rev.டேனியேல் செல்லதுரை ஐயா அவர்கள் தலைமையில் Gospel Convener பால் பன்னீர் செல்வம் அவர்களின் வழிநடத்துதலின் படி, சபையாராக சென்று, அம்மக்களுக்கு புத்தாடைகளை வழங்கினோம்

மேலும் அருகில் உள்ள CSI அனைக்கட்டுச் சேரி மக்களுக்கும் புத்தாடைகளை வழங்கினோம். அவ்வமயம், தண்டுரை, பட்டாபிராம் சேகர் ஆயர். ராணி அம்மா அவர்கள் நம் சபை மக்கள் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள். மேலும் சேகர பொருளர். அன்பு ஊழியர். கருணாகரன், திருமதி. சுசி,சேகரக்குழு உறுப்பினர். ஜெய்சிங் ஆகியோர் நமக்கு ஐக்கிய விருந்து படைத்தனர்.

இந்த சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்ற இயேசுவின் அருள்மொழிக்கிணங்க, புத்தாடைகளை வழங்கிய நம் சபை மக்களை கர்த்தர் ஆயிரம் மடங்கு ஆசீர்வதிப்பாராக

செயலாளர்
**கிளாட்வின் பிரபாகரன்**

# சிறுவர் ஞாயிறு

காலை 8.30 மணி 15.01.2017

# கிறிஸ்மஸ் மரவிழா

## சிறுவர்கள் கலை நிகழ்ச்சி

நாள் 15.01. 2017 ஞாயிறு

மாலை 6.00 மணிக்கு

பாடல்கள், நடனம், சிறப்பு செய்திகள்

# வருந்துகிறோம்

நமது சபையின் செயலாளர்
திரு. **கிளாட்வின் பிரபாகரன்,**
முன்னாள் பொருளர்
திருமதி **மெரோலின் ஆல்பர்ட்** இவர்களின் தந்தையுமான

**திரு.ரிச்சர்ட் முருகேசன்** அவர்கள்

16.12.2016 அன்று காலை இயற்கை எய்தினார்.
அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்திற்கு கடவுள்
ஆறுதல் அளிக்க திருச்சபையாராக வேண்டிக்கொள்கிறோம்.



# இல்லன்னா...

படுகுழி இல்லன்னா..
யோசேப்பு இல்ல.
கோலியாத் இல்லன்னா..
தாவீது இல்ல.
பரிசேயர், சதுசேயர் இல்லன்னா..
அநேக அற்புதங்கள் இல்ல.
யூதாஸ் இல்லன்னா..
கல்வாரியும் இல்ல.
சிலுவை இல்லன்னா..
மீட்பு இல்ல.
செங்கடல் இல்லன்னா..
கானான் இல்ல
சோதனை இல்லன்னா..
சாதனை இல்ல.
வேதனை இல்லன்னா..
வெற்றி இல்ல.
இன்று நீ சந்திக்கும் பிரச்சனைகள்
உன்னை அழிக்க அல்ல
உன்னை உன் இலட்சிய கரை கொண்டு செல்லவே
விசுவாசத்தில் நிலைத்திரு.

தொகுப்பு
**A.ஜோசப்**